### அடுத்த தலைமுறையினருக்கு ஊக்கம் அளிக்கும் வகையில்

# தமிழ்நாடு - விளையாட்டுகளுக்கான உயர் திறன் மையமாக விளங்கி வருகிறது!

## சர்வதேச பீச் வாலிபால் போட்டி தொடக்க விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை,நவ.23

**சென்னையை அடுத்த மாமல்லபுரம் வடநெம்மேலியில் சர்வதேச பீச் வாலிபால் போட்டியை நேற்று முன்தினம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இதில் உலகம் முழுவதுமிருந்து விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர். அப்போது அவர் விழாவைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர் ஆற்றிய சிறப்புரையின் விவரம் வருமாறு:**

வாலிபால் வேர்ல்ட் பீச் ப்ரோ டூர்- 2024 சென்னை சேலஞ்ச் துவக்கவிழா நடக்கும், இந்தக் கோலாகலமான நிகழ்ச்சியில் பங்கேற்று தொடங்கி வைப்பதில் நான் பெருமை அடைகிறேன். இந்த உற்சாகமான நிகழ்ச்சியில் பங்கேற்க, உலகம் முழுவதிலுமிருந்து சென்னை வந்துள்ள அனைத்து விளையாட்டு வீரர்களையும் அலுவலர்களையும் பார்வையாளர்களையும் வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சி.

**வெளிப்படுத்தும் களம்**

`உலக பீச் ப்ரோ சேலஞ்ச்' போட்டியானது, வேகத்திறன் விளையாட்டுகளில் ஒன்றான `பீச் வாலிபால்' மூலம் சர்வதேச விளையாட்டு வீரர்களை ஒருங்கிணைத்து, அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் களமாக அமைகிறது.

திராவிட மாடல் அரசானது, விளையாட்டுத் திறமைகளை ஊக்குவிப்பதிலும், நமது இளைஞர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதிலும் மிகுந்த அர்ப்பணிப்புடன் உள்ளது. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திறன்மிக்கத் தலைமையின் கீழ், தமிழ்நாடு அரசு தொடர்ந்து பல்வேறு தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளை ஏற்பாடு செய்து வருகிறது.

**இளையோர் விளையாட்டுப் போட்டி**

இதே மாமல்லபுரத்தில் நாம் 44-வது `பிடே (FIDE) செஸ் ஒலிம்பியாட்' போட்டியை வெற்றிகரமாக நடத்தினோம். மேலும் `ஸ்குவாஷ் உலகக் கோப்பை', `உலக அலைச்சறுக்கு லீக், `சைக்கிளத்தான், ஹாக்கி ஆண்கள் ஆசிய சாம்பியன்ஸ் டிராபி மற்றும் கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டி உட்பட பல சிறப்புமிக்க போட்டிகளை நாம் நடத்தியிருக்கிறோம்.

சமீபத்தில், `தேசிய டிராக் சைக்கிள் ஓட்டுதல் போட்டி', `தேசிய சீனியர் ஆண்கள் ஹாக்கி போட்டி', `சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ்' மற்றும் `சென்னை ஃபார்முலா -4 கார் பந்தயம்' ஆகியவற்றையும் நடத்தியுள்ளோம்.

தற்போது, தமிழ்நாடு விளையாட்டுகளுக்கான உயர்திறன் மையமாக விளங்கி வருகிறது. நமது மாநில வீரர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பல்வேறு போட்டிகளில் சிறப்பிடங்களைப் பெற்றுள்ளனர்.

நமது அரசின் முயற்சிகள், பல்வேறு தரப்பில் இருந்தும் பாராட்டுகளைப் பெற்று வருகின்றன. 2024-ஆம் ஆண்டுக்கான `தி ஹிந்து ஸ்போர்ட் ஸ்டார்' திறமையாளர் விருது விழாவில், `விளையாட்டுகளை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலத்துக்கான விருதை' தமிழ்நாடு பெற்றுள்ளது. சி.ஐ.ஐ. பிசினஸ் ஸ்போர்ட்ஸ் விருதுகளில், `விளையாட்டு வளர்ச்சியை ஊக்குவிக்கும் மாநிலத்துக்கான விருதை' தமிழ்நாடு பெற்றது.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.11.2024) செங்கல்பட்டு மாவட்டம், வடநெம்மேலியில், வாலிபால் வேர்ல்ட் பீச் ப்ரோ டூர் போட்டியினை தொடங்கி வைத்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு வாலிபால் சங்கத் தலைவர் மருத்துவர் பொன்.கௌதம சிகாமணி மற்றும் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




**“திராவிட மாடல் அரசானது, விளையாட்டுத் திறமைகளை ஊக்கு விப்பதிலும், நமது இளைஞர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதிலும் மிகுந்த அர்ப்பணிப்புடன் உள்ளது.”**

**உயர்சிறப்பு விடுதி**

இந்த பீச் வாலிபால் போட்டியில், இந்தியாவில் இருந்து இரண்டு மகளிர் அணிகள் விளையாடுகின்றன; அவற்றில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று வீராங்கனைகள் இடம்பெற்றிருக்கிறார்கள். அவர்களில் தீபிகாவும் பவித்ராவும் மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதி மற்றும் விளையாட்டுக்கான உயர்சிறப்பு விடுதியைச் சேர்ந்தவர்கள்.

தீபிகாவும் பவித்ராவும் கடந்த 8 ஆண்டுகளாக மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதியில் பயிற்சி பெற்று வருகிறார்கள் என்கிற செய்தியை, உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் பெருமிதம் கொள்கிறேன். அதேபோல், இந்தப் போட்டியில் மூன்று ஆடவர் அணிகள் பங்கேற்கின்றன. இந்த அணிகளில் இடம்பெற்றுள்ள ஆறு வீரர்களில் - ராபின், பரத், தியாகு, செல்வம் ஆகிய நான்கு பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்.

**உயர்ந்த இலக்குகள்**

இந்தப் போட்டியானது நமது அடுத்த தலைமுறை கைப்பந்து வீரர்கள் உயர்ந்த இலக்குகளை குறி வைக்கவும், அவர்களின் விளையாட்டுக் கனவுகளைத் பின்தொடரவும் ஊக்கமளிக்கும் என்று நம்புகிறோம்.

இந்தப் போட்டியை சென்னைக்குக் கொண்டு வர அயராது உழைத்த மாநில விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தையும், கைப்பந்து சங்கங்கள், ஏற்பாட்டுக் குழுவினர் மற்றும் அனைத்து தன்னார்வலர்களையும் இந்த நேரத்தில் பாராட்ட விரும்புகிறேன்.

இந்தப் போட்டியில் பங்கேற்கும் அனைத்து வீரர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து விளையாட்டு ஆர்வலர்களையும், தமிழ்நாட்டு மக்களளையும் இந்த போட்டியில் கலந்துகொள்ளும் வீரர்களின் அபாரமான திறமைகளை நேரில் கண்டுகளிக்க முன்வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மிகுந்த உற்சாகத்துடன், `உலக பீச் வாலிபால் ப்ரோ டூர்- 2024' சென்னை சேலஞ்ச் போட்டியை அதிகாரப்பூர்வமாக துவக்கி வைக்கிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர்-செயலர் ஜே.மேகநாத ரெட்டி ஐ.ஏ.எஸ்., மற்றும் உலக பீச் வாலிபால் ப்ரோ டூர் அமைப்பின் அலுவலர்கள், தமிழ்நாடு கைப்பந்து சங்கப் பிரதிநிதிகள், கைப்பந்து வீரர்கள், பயிற்சியாளர்கள், எஸ்.டி.ஏ.டி (SDAT) விடுதி மாணவர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

---

### துணை முதல்வர் பிறந்தநாளையொட்டி - ஆட்டோ, கார், கனரக வாகன நிறுத்தங்களில்

## கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி சார்பில் தமிழகம் முழுதும் நலத்திட்டங்கள் வழங்கல்!

### டி.எம்.கதிர்ஆனந்த் தலைமையில் கூட்டம்! அணிச் செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு!

*சென்னை, நவ.23-*

*22.11.2024 வெள்ளி அன்று கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி சார்பில் மாநில நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் காணொளி காட்சி வாயிலாக நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கழக அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாநில தலைவர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் தலைமை தாங்கினார். மாநில செயலாளர் டி. செங்குட்டுவன் முன்னிலையில் வகித்தார். கூட்டத்தில் மாநில துணை செயலாளர்கள் மருத்துவர் வி.முத்துராஜன், எம்.எல்.ஏ., கே.தினகரன், மருத்துவர் ஆர்.சி.எம். விஷ்ணு பிரபு, ஏ.ஆர்.டி..உதயசூரியன், எம்.சிவராஜ், ஏ.கே.பூபதி, எஸ். செல்லதுரை, எஸ்.ராம்குமார், தங்கம், ஸ்ரீதர் உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள். இறுதியாக ஏ.ஆர்.டி. உதயசூரியன் நன்றி கூறினார்.*

*இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-*

*திராவிட இயக்கத்தின் ஐந்தாம் தலைமுறை மாநில இளைஞரணி செயலாளர் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, தமிழ்நாட்டின் துணை முதல்வராக தேர்ந்தெடுத்த தமிழக முதல்வர், கழக தலைவர், தளபதியார் அவர்களுக்கு திமுக மாநில ஓட்டுநர் அணி சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.*

*தமிழ்நாட்டின் துணை முதல்வர், திராவிட இயக்கத்தின் ஐந்தாம் தலைமுறை, இளைஞரணியின் மாநிலச் செயலாளர், கழக சொற்பொழிவாளர்கள் படைவரிசைக்கு, அடுத்த தலைமுறையை உருவாக்கும் தமிழ்நாட்டின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் நவம்பர் 27 அன்று சிறப்பாக கொண்டாடும் வகையில், திமுக அமைப்புசாரா ஓட்டுனர் அணி சார்பில் தமிழ்நாடுமுழுவதும் உள்ள அமைப்புசாரா ஓட்டுநர்கள் பணிபுரியும்வாகன நிறுத்தங்களில் (ஆட்டோ, கார், கனரக வாகனங்கள் உள்ளிட்ட வாகனங்கள் நிறுத்தும் இடங்கள்) ஒலி பெருக்கி வைத்து, திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கிடவும், கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கி, ஏழை எளியோருக்கு அன்னதானம், பள்ளி குழந்தைகளுக்கு இலவச நோட்டு புத்தகம், அமைப்புசாரா ஓட்டுநர்களுக்கு சீருடை வழங்கல் உள்ளிட்ட நல உதவி வழங்கி சிறப்பாக கொண்டாடி, அதன் விவரத்தை மாநில தலைமைக்கும், அன்பகத்திற்கும் அனுப்பி வைக்குமாறு சம்மந்தப்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகி களை இக்கூட்டம் வலியுறுத்தி கேட்டுக் கொள்வதுடன்; மாநில துணைச் செயலாளர்கள், தங்களுக்கென ஒதுக்கப்பட்ட மாவட்டங்களுக்கான, நமது அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களை உடனடியாக தொடர்பு கொண்டு அனைத்து*

*மாவட்டங்களிலும் துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாட ஏற்பாடு செய்யுமாறு, இக்கூட்டம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.*

*கனிவான சிந்தனையுடன் திட்டங்களை தீட்டும் கருணை வடிவான திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதல்வரின் 3/4 ஆண்டு கால ஆட்சியில் இந்திய திருநாடு மட்டுமல்லாமல், உலகமே பாராட்டும் வகையில் கொண்டுவரப்பட்டு செயல்படுத்தி வரும் மாதந்தோறும் குடும்ப பெண்களுக்கு வழங்கி வரும் ரூ.1000 கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்.*

*தினமும் வேலைக்குச் செல்லும் பெண்களின் செலவை குறைக்கும் வகையில் விடியல் பயணம் திட்டம்.*

*பள்ளிக்கு வரும் 1 முதல் 5 ம் வகுப்பு வரையிலான பிள்ளைகளின் பசிப்பிணியை போக்கிட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்.*

*கல்லூரிக்கு வரும் மாணவியருக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் புதுமை பெண் திட்டம்.*

*கல்லூரிக்கு வரும் மாணவர்களுக்கும் மாதம் ரூ.1000 வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டம்.*

*நம்மைக்காக்கும் 48 மணி நேர திட்டம்.*

*10 இலட்சம் கோடிக்கான தொழில் முதலீடுகள் திட்டம்.*

*2 இலட்சம் விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம் என பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தியதன் மூலம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் தமிழ்நாடு என அனைத்து பொருளாதார நிபுணர்களும், புள்ளியல்துறை அறிஞர்களும் பாராட்டுகிற ஆட்சியை வழங்கி வரும், திராவிட இயக்கத்தின் நான்காம் தலைமுறை முதல்வர் தளபதியார் அவர்களுக்கு இக்கூட்டம் தனது*

*நெஞ்சார்ந்த பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும்தெரிவித்துக்கொள்கிறது.*

*நாட்டில் உள்ள தொழிலாளர் நலச்சட்டங்கள் மூலம் பயனடைய முடியாத அமைப்புசாரா ஓட்டுநர்களுக்கும், நல வாரியம் மூலம் கிடைக்கும் பணப்பலன்கள் உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை பெற்றுத் தந்திட 'திமுக அமைப்புசாரா ஓட்டுநர்கள்" என்கிற அமைப்பை உருவாக்கி பல லட்சம் ஓட்டுநர்கள் பயனடைய செய்த திராவிட மாடல் நாயகர் முதல்வருக்கு இக்கூட்டம் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வீரபாண்டி எஸ். ஆறுமுகம்

### நவம்பர் 23 (2012)



**பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோதே, தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, 1955ஆம் ஆண்டு முதல் பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, 1956ஆம் ஆண்டு பூலாவரி கிளைக் கழகச் செயலாளராக, வட்டக் கழக பிரதிநிதியாக, மாவட்டக் கழகப் பிரதிநிதியாக, பின்னர் பொதுக்குழு உறுப்பினராக, தலைமைச் செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்று, தொடர்ந்து 38 ஆண்டுகள் சேலம் மாவட்டக் கழகச் செயலாளராக தொய்வின்றி பணியாற்றி வந்தவர்.**

**விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் – இலங்கைத் தமிழர் ஆதரவுப் போராட்டம் – சட்டநகல் எரிப்புப் போராட்டம் ஆகியவற்றில் தலைமை ஏற்று சிறைவாசமும் – நெருக்கடிநிலை காலத்தில் 'மிசா' கைதியாக 14 மாத சிறைவாசமும் அனுபவித்தவர்.**

**பூலாவரி ஊராட்சிமன்றத் தலைவர், கிராம கூட்டுறவு நாணய சங்கத் தலைவர், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியத் தலைவர், சேலம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர், 1962 தொடங்கி ஆறு முறை சட்டப்பேரவை உறுப்பினர், சட்டமன்ற மேலவை உறுப்பினர், ஒரு முறை ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர், மூன்று முறை வேளாண்மைத் துறை அமைச்சர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**“சேலத்துச் சிங்கமாம், என்னுடைய தளபதி ஒருவரை இழந்த துக்கம் என்னை வாட்டி வதைக்கிறது. எனக்கு ஆறுதல் சொல்ல யாரும் இல்லை. அவ்வளவுதான் சொல்ல முடியும்!” என தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**